## தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2019

-----------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 11 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் 3 இன் 47 பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலப்பகுதிக்குரிய பிழைகள் அவற்றை கண்டுபிடித்த பின்னர் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியில், பிழை ஏற்பட்டிருந்த காலப் பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பீட்டுப் பெறுமதிகள் மீண்டும் வெளியிடுவதன் மூலம் கடந்த காலத்திற்கு ஏற்றவாறு சரிசெய்யப்பட வேண்டிய, போதிலும் அவ்வாறு செய்யாமல் முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் என ரூபா 330,171 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானத்துடன் கூட்டப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இலங்கையின் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் எதிர்வரும் வருடங்களின் போது முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் மேற்கொள்வதற்காக அறிவுரை வழங்கப்பட்டது என. | நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். இந்த பிழைகளை சரி செய்து 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமம் 5 இன் 31 பந்தியின் பிரகாரம் வெளிநாட்டுப் பணம் ரூபாக்களுக்கு மாற்றும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை தேசிய கண் வங்கியினால் இனங்கண்டிருந்த ரூபா 309,272 ற்கான வெளிநாட்டுப் பணம் மாற்றலில் ஏற்பட்டிருந்த நட்டம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய கண் வங்கி தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பிரிவொன்றாக இன்றி செயற்திட்டமொன்றாக செயற்படுத்தப்படுவதனால் அதற்காக தனியாக கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதில்லை என. | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் தேசிய கண் வங்கியின் கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். இந்த பிழையை சரி செய்து 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | நியமம் 7 இன் 69 பந்தியின் பிரகாரம், சொத்து ஒன்றின் பெறுமானத் தேய்வு கணித்தல் ஆரம்பிப்பது அதனை பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னர் | நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் நியமத்தின் பிரகாரம் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்ட 2013 ஆண்டின் பின்னர் | நியமத்தின் பிரகாரம் பெறுமானத் தேய்வுக் கொள்கை தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| எனினும் மற்றும் சொத்துக்கள் இனங்கண்டு அகற்றப்பட்ட பின்னர் பெறுமானத் தேய்வு கழித்தல் நிறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதி மற்றும் அகற்றிய திகதி என்பனவற்றை கவனத்தில் எடுக்காமல் கொள்வனவு செய்த ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு கழிக்காமல் அகற்றிய ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் கொள்வனவு செய்திருக்காமையால், நியமத்தின் படி பெறுமானத் தேய்வு கணித்தல் தேவைப்படவில்லை எனவும், மற்றும் புதிய சொத்துக்கள் கொள்வனவு செய்த பின்னர் பெறுமானத் தேய்வுக் கொள்கையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வேண்டும். இந்த பிழையை சரி செய்து 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் செயற்திட்டமொன்றாகிய இலங்கை தேசிய கண் வங்கிக்கு சொந்தமாக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 5.93 மில்லியனிற்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களும் ரூபா 6.87 மில்லியனிற்கான நடைமுறை சொத்துக்கள் மற்றும் ரூபா 8.3 மில்லியனிற்கான நடைமுறை பொறுப்புக்களும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் வங்கிக்கான வருமானம் மற்றும் செலவுகள் காசு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதியத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. | தேசிய கண் வங்கி, நிதியத்தின் தனியான பிரிவொன்றாக அன்றி செயற்திட்டம் ஒன்றாக நடாத்தப்படுவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை எனவும், செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் கண் வைத்தியசாலை சட்டரீதியான நிறுவனம் ஒன்றாக மாற்றப்பட்ட பின்னர் உரித்தாக்கும் வரை பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருந்ததெனவும் கண் வங்கி சட்டரீதியான நிறுவனம் ஒன்றாக ஆக்கப்பட்ட பின்னர் அவற்றின் வருமானம் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும் என. | கண் வங்கிக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கண் வங்கியின் வருமானம் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். இந்த பிழையை சரிசெய்து 2020 ஆண்டிற்காக கணக்குகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுகாதார அமைச்சின் உயிர் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவில் இருந்து பெறவேண்டிய ரூபா 10.58 மில்லியன் தொகை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாணயப்பத்திரத்தின் பெறுமதி தொடர்பாக உரிய வங்கியினால் வழங்கப்படும் உறுதிப்படுத்தும் கடிதம்( Letter of Confirmation) 2019 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் திகதி வரை கிடைத்திருக்கவில்லை என, நாணயப் பத்திரத்தை திறப்பதற்காக உயிர் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவிற்கு | இந்த பிழையை சரி செய்து 2020 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

வழங்கியிருந்த தொகை மற்றும் சிட்டையின் பெறுமதி இடையே வித்தியாசம் ஆகிய ரூபா 10.58 மில்லியன் தொகையினை தற்போது மீளளிப்பு செய்யப்பட்டதுடன், மற்றும் அடுத்த வருட நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதியத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக் களின் படி பெறுமதி | தேசிய கண் வங்கயின் நிதிக்கூற்றுக்க ளின்படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | தேசிய கண் வங்கியின் தகவல் தொழில்நுட்ப தயாரிப்புக் கட்டணங் கள் | 42.75 | 39.47 | 3.28 | கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு ஒன்றாக தனிப்பட்ட நிறுவனம் ஒன்றாக சட்டரீதியாக்கும் வரை அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்திட்டம் ஒன்றாக நடாத்தப்படுவதனால் அதன் கொடுக்கல் வாங்கல்கள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது என. | நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் தேசிய கண் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளை ஒப்பீடு செய்யக்கூடிய விதமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | தேசிய கண் வங்கியின் செலவுகள் | 48.40 | 49.21 | 0.80 | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | சிறிய பங்கு உரிமையா ளர்களின் உரிமைகள் - தேசிய கண் வங்கி | 9.96 | 23.00 | 13.04 | -மேற்படி- | -மேற்படி- |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 381 | திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2016 ஆண்டின் போது அரச வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது ட, 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 12.11 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 381 பொருந்துவது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளுக்கு எனவும், மற்றும் இந்தக் கணக்கு நிதியத்தின் உத்தியோகபூர்வ கணக்கொன்றன்றி நிதி முகாமைத்துவத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட கணக்கொன்று என, இந்த கணக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது திறக்கப்பட்டிருந்தது எனவும், எவ்வாறாயினும், இது தொடர்பாக அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | இந்த கணக்கு உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கு அலுவல்களுடன் தொடர்புடைய கணக்கொன்றாக காணப்பட்டமையால் அரச நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் குறிப்பிட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 04 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக இலக்காகிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட திட்டம் தயாரிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட திட்டம் விரைவாக தயாரிப்பதற்கு மற்றும் அதன் படி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 90.46 மில்லியன் இற்கான மிகை ஒன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 207.16 மில்லியன் தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 116.70 மில்லியன் இற்கான பின்னடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைதலுக்கு மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 121.14 மில்லியனினால் அதிகரித்திருத்தல் முக்கியமான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் தேசிய கண் வங்கியை நிறுவுவதற்காக சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவனத்துடன் 2010 ஆண்டின் போது மேற்கொண்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி மற்றும் இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு ஒன்றாக நிறுவுவதற்காக 2013 ஆகஸ்ட் 29 திகதி கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கி சட்டம் ஒன்றின் மூலம் வேறாக நிறுவனம்சார் கட்டமைப்பொன்றுடன் அலகு ஒன்றாக நிறுவுவதற்கு 2020 ஆகஸ்ட் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இல்ங்கை தேசிய கண் வங்கிச் சட்டம் தற்போது அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளதுடன், அமைச்சின் சட்டப் பிரிவு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமொன்றின் மூலம் இலங்கை தேசிய கண் வங்கி வேறான நிறுவன கட்டமைப்பு உடைய சட்டரீதியான அலகு ஒன்றாக நிறுவுதல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு என நிறுவும் வரை அதன் அலுவல்களை செயற்திட்டம் ஒன்றாக தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கும் 2007 ஏப்ரல் 05 திகதிய 33 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் படி ஆளணியினை சேர்ப்பதற்காக மற்றும் சம்பளம் செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறாயினும் 33 இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 1.1 இன் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிப்பதற்காக தேவையான நிபந்தனைகளை பூர்த்தி | இது தொடர்பாக அமைச்சரவையை அறிவுறுத்துவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்காலத்தில் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | 2007 ஏப்ரல் 05 திகதிய 33 இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி, தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிக்க முடியாமையால் மற்றும் அதன் படி ஆளணியினரை சேர்ப்பதற்கு முடியாமையால் இது தொடர்பாக அமைச்சரவையை அறிவுறுத்த வேண்டியிருந்ததுடன், |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருக்காத காரணத்தினால் அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்படுவதற்கு முடியாமல் இருந்தது. | | எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டில் செயற்திட்ட காலம் முடிவடைந்திருந்த டெங்கு கண்காணிப்பு செயற்திட்டத்தில் (Dengue Tools Project) மீதியாக இருந்த ரூபா 13.43 மில்லியன் தொகை வெகுமதியாக வழங்கிய நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு அல்லது தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதியத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலம் முடிவடைந்திருந்த செயற்திட்டத்தின் மீதிப் பணம் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வெளிநாட்டு உதவி செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் மீதியான பணம் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு அல்லது அப்பணம் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதிக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 17 ஒப்பந்த வேலைகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2 ஆண்டுகள் முதல் 6 ஆண்டு வரையான கால வீச்சில் காணப்படும் ரூபா 1,429,775 தொகைக்கான பிடி பணத்தை தீர்ப்பதற்கு அல்லது வருமானம் என இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிடி பணத்தை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என. | பிடி பணம் கோரப்படாமை தொடர்பாக குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டியிருந்ததுடன், அவர்களிடம் கிடைக்கும் பதிலை அடிப்படையாக கொண்டு வருமானம் என இனங்காண்பதற்கு அல்லது பொருத்தமான வேறு நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (இ) | சுகாதார அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருக்காத மத்திய அரசின் மற்றும் மாகாண மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ உபகரணத் தேவைகள் 2018 ஆண்டின் போது மற்றும் 2019 ஆண்டின் போது முறையே ரூபா 9,845 மில்லியன் மற்றும் ரூபா 2,131 மில்லியன் தொகைகளாகும். இது தவிர பொது வைத்தியசாலைகள் மற்றும் தள வைத்தியசாலைகள் 11 ற்காக 130 அத்தியவசிய உபகரணத் தேவையும் 13 வேலைகள் மற்றும் கருமங்களுக்கான தேவையும் காணப்பட்டன. எனினும், அந்த | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனேகமான மருத்துவ உபகரணங்கள் தேசிய பாதீட்டின் மூலம் திறைசேரி ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன என. | சுகாதாரத் துறையின் தேவைகளுக்காக நிதியத்தில் காணப்படும் பொது நிதியத்தை பயன்படுத்தும் செய்முறை ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைபாடுகள் தொடர்பாக கண்டறிந்து முக்கியத்துவத்தை அடிப்படையாக கொண்டு அவற்றில் ஏதேனும் தொகையொன்று பொது நிதியத்தில் இருந்து நிறைவேற்றிக்கொடுக்கும் செய்முறை ஒன்று நிதியத்தில் காணப்படவில்லை. | | |
| (ஈ) | அம்பாறை பொது வைத்தியசாலையில் கிரய மதிப்பீடு ரூபா 4.68 மில்லியனை கொண்ட தற்போது காணப்படும் கட்டடத்தை திருத்த வேலை மேற்கொண்டு பணம் செலுத்தும் வாட் ஒன்று நிறுவுவதற்காக 2011 மார்ச் 23 திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றினை பெற்றிருந்த போதிலும், அதற்கு புறம்பாக 08 அறைகளைக் கொண்ட தரைமாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக நிதியத்தில் இருந்து ரூபா 18.20 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | கிழக்கு மாகாணத்தில் தனியார் வைத்தியசாலையின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் அப்பகுதிய பொது மக்களின் சுகாதார தேவைகளுக்காக இந்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது எனவும், பணம் செலுத்தும் வாட் ஒன்று நிர்மாணிக்கப்பட்ட உடனேயே நாளாந்தம் அதன் அறைகள் அனைத்தும் நோயாளிகளினால் நிரப்பப்படும் எனவும் நிதியம் அல்லது அமைச்சு அல்லது வைத்தியசாலை எதிர்பார்க்கவில்லை எனவும், பணம் செலுத்தும் வாட் நிர்மாணிக்கப்படுவதற்காக செலவிடப்பட்ட தொகையை நோயாளிகளிடம் இருந்து அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படவில்லை என. | அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முரணாக செயற்பட்டிருப்பதால் அதற்காக அணவல் அங்கீகாரம் பெற்றுகொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதார அபிவிருத்தி அலுவல்களுக்காக நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் ஆக்கபூர்மாக பயன்படுத்துவதற்கும் ஈடுபடுத்தப்பட்ட பணத்தின் பெறுமதியினை கூட்டுவதற்காக தொடர்புடைய நிறுவனத்துடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கேகாலை மாவட்டத்தில் 04 கர்ப்பிணி மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக நிதியத்தில் இருந்து ரூபா 11.48 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அப்பணத்தில் ரூபா 3.26 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஆண்டின் போது பொது மக்கள் பயன்பாட்டிற்காக உரித்தாக்கப்பட்டிருந்த வேரகொட சுகாதார சிகிச்சை நிலையத்தில் மாதத்திற்கு இரண்டு தடவைகள் குழந்தைகளை பாரம் அளவையிடல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 திகதி வரை வேறேதும் சிகிச்சை அலுவல் களுக்காக பயன்படுத்தப்பட்டு இருக்காமையால் கட்டிடம் | கேகாலை மாவட்டத்தில் கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை நிலையம் நடாத்துவதன் பொறுப்பு சபரகமுவ மாகாண சுகாதார அமைச்சு மற்றும் கேகாலை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளருக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், குறைபாடுகளை சரிசெய்து செயற்படு நிறுவனம் ஒன்றில் நடாத்தப்பட்டு வருவதாக மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அறிவித்துள்ளார் என, வேகல்ல சுகாதார நிலையத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சிகிச்சை அலுவல்கள் நடாத்தப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் தலாவ சுகாதார நிலையத்திற்கு மின்சார | சுகாதார அபிவிருத்தி அலுவல்களுக்காக நிர்மாணிக்கப்படும் கட்டிடங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் ஈடுபடுத்தப்பட்ட பணத்தின் பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கும் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். நிர்மாண வேலைகளின் தரம் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கும் அவதானிக்கப்படும் குறைபாடுகள் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலேயே சரி செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைபயன்பாட்டு நிலைமையை அடைந்திருந்தது. மேலும் ரூபா 3.32 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்து வேகல்ல சுகாதார சிகிச்சை நிலையம் 2016 ஆண்டின் போது பொது மக்களின் உரிமைக்கு ஆக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி அளவிலும் சிகிச்சை கருமங்கள் எதற்காகவும் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அது தவிர ரூபா 2.19 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2016 ஆண்டின் போது பொது மக்கள் உரிமைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தலாவ சுகாதார சிகிச்சை நிலையம், கதவுகள் யன்னல்களுக்காக தரத்தில் குறைந்த பலகைகள் பயன்படுத்தப்பட்டு இருத்தல், சிவிலின் மின்விசிறிகள் செயற்படாமை, தண்ணீர் மோட்டர் செயற்படாமை, ஆளணியினர் கழிவறை நீர் ஓடிச் செல்லக் கூடியவாறு மேற்கொள்ளப்படாமை, நீர் நிரப்பும் தொட்டி செயற்படாமை போன்ற குறைபாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தது எனவும் குறைபாடுகள் தொடர்பாக மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரை அக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | வசதிகள் வழங்கப்பட்டு குறைபாடுகளுடன் நடாத்தப்பட்டு வருகின்றது என | |
| (ஊ) | அரச வைத்தியசாலைகளுக்கு அத்தியவசியமான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மற்றும் வைத்தியசாலைகளின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு தேவையான நிதிகளை சேகரிக்கும் குறிக்கோளுடன், சுகாதார அபிவிருத்தி லொத்தர் முறை 1998 செப்தெம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தி இருந்ததுடன், அனைத்து சீட்டிழுப்பு தவணைகளிலும் முன்னர் அத்தவணையின் நிதியத்திலிருந்து செய்யப்பட வேண்டிய விடயத்தை இனங்கண்டு வெளியிடுவதன் மூலம் அவ்விடயத்தை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கவனம் செலுத்தப்பட்டது என. | சுகாதார அபிவிருத்தி லொத்தர் முறையின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

2014 ஆண்டு முதல் 2019 ஜூன் 30 திகதி வரையான காலப் பகுதியினுள் கிடைத்திருந்த லொத்தர் வருமானம் ரூபா 328.33 மில்லியன் தொகையினை வைத்தியசாலைக்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மற்றும் வைத்தியசாலைகளின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கும் முறையே ரூபா 17.43 மில்லியன் தொகை மற்றும் ரூபா 80.47 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், அவை ஒட்டுமொத்த லொத்தர் வருமானத்தின் 29.81 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹரகம எதிர்பார்ப்புக்கள் வைத்தியசாலைக்கு Tomotherapy linear Accelerator இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக நிதியத்தின் கீழ் எதிர்பார்ப்புக்கள் வைத்தியசாலை என்ற பேரில் வங்கிக் கணக்கு ஒன்றிற்கு பொது மக்கள் உதவி சேகரிக்கும் குறிக்கோளுடன் சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் செயலாளரும், நிதியத்திற்காக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மற்றும் Fight Cancer Guarantee Trust அமைப்புடன் சேர்ந்து தினம் குறிப்பிடப்படாத கருத்துக் கடிதம் ஒன்று (Letter of Intent) கையொப்பமிடப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் Fight Cancer Guarantee Trust நிறுவனம் சமூக சேவைகள் மற்றும் பொது வசதிகள் வழங்குவதற்கான புண்ணிய அலுவல்கள் தொடர்புடைய நிறுவனம் ஒன்றென சமூக சேவை திணைக்களத்தில் முறையாக அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றாக காணப்படவில்லை. கருத்துக் கடிதத்தில் கையொப்பமிட்ட திகதி மற்றும் அது வினைப்படுத்தும் திகதி தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் கருத்துக் கடிதத்தில் முதலாவது விடயம் தொடர்பாக தொடர்புடைய | பதில் சுகாதார செயலாளரினால் 2019 ஏப்ரல் 01 திகதி கருத்துக் கடிதம் (Letter of Intent) கையொப்பமிடப்பட்டிந்தது எனவும் நிதியம் சார்பாக சுகாதார சேவை பணிப்பாளரினால் கையொப்பமிடப்பட்டிருந்தார் எனவும் பிரதேசத்தில் உள்ள அனைத்து பொது மக்களுக்கும் வங்கியில் நேரடியாக பணம் வைப்புச் செய்ய முடியாமையால் கிந்தொட்ட அபிவிருத்தி மன்றத்தினால் பணம் சேகரிக்கப்பட்டு நேரடியாக அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது என மற்றும் அப்பணம் நேரடியாக வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது என | இணக்கங்கள் மற்றும் உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு முன்னர் குறிப்பிட்ட வெளி நிறுவனங்களின் சட்ட நிலைமை பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும். இணங்கிய விடயங்களுக்கு அமைவாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் வைப்புச் செய்யும் படி நன்கொடை வழங்குவோருக்கு அறிவிக்க வேண்டும். அதற்கு புறம்பாக நடைபெறும் நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக்கள் ஏற்படாதவாறு அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும். |

மூன்று தரப்பினரினாலும் 2020 ஆகஸ்ட் 31 திகதி வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அக் கடிதத்தின் மூன்றாவது விடயத்தின் பிரகாரம் வங்கிக் கணக்கு ஒன்றிற்கு நன்கொடை வழங்குவோரினால் நேரடியாக பணம் வைப்புச் செய்வதற்கு செய்யப்பட வேண்டுமென அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு புறம்பாக Fight Cancer Guarantee Trust தொகுதியின் செயற்பாடுகளின் மூலம் வீட்டுக்கு வீடு சென்று பொதுமக்கள் உதவி சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 255,500 தொகை வங்கிக் கணக்குகில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 நிதியத்தின் குறை பயன்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 24 குறிப்பிட்ட கருமங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 36.34 மில்லியன் நன்கொடை 2 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான காலவீச்சில் அக் குறிக்கோள்சார் கருமங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நன்கொடைகளை பயன்படுத்தி குறிக்கோள்சார் கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளும் படி குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதேனும் குறிப்பிட்ட கருமம் ஒன்று நிறைவேற்றுவதற்காக நிதியத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த நிதியம் அக் கருமத்தை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியம் பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப்பகுதியுள் பொது நிதியத்தில் காணப்பட்ட ரூபா 362 மில்லியன் தொகை பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் கடந்த 05 வருட காலப் பகுதியுள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்சார் கருமங்களுக்காக செலவீடுகளின் சதவீதம், செலவிடப்பட்ட மொத்தத் தொகையில் 76 சதவீதம் முதல் 7 | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் நிதியத்திற்கு கிடைக்கும் பணம் குறிப்பிட்ட வருடத்திலேயே பயன்படுத்தப்படுவது இல்லை எனவும் மற்றும் தேசிய பாதீட்டின் மூலம் நாட்டின் அனைத்து சுகாதார சேவை வழங்கும் நிறுவனங்களின் அபிவிருத்திற்காக ஏற்பாடுகள் வழங்கப்படுவதனால் தேசிய பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத அவசர தேவைகளுக்காக நிதியத்தில் | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை விரைவாக தயாரிப்பதற்கு மற்றும் அதன்படி இலக்குசார் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் சுகாதார பாதுகாப்பு அலுவல்களுக்காக பணம் செலவிடுதல் நிதியத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தமையால் அந்த குறிக்கோளை |

| | | |
|---|---|---|
| சதவீதம் வரை படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன், அதற்கு ஒப்பாக குறிக்கோள் சாராத கருமங்களுக்காக செலவீடு செய்யும் சதவீதம் செலவிடப்பட்ட மொத்தத் தொகையில் 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | இருந்து ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன என. | நிறைவேற்றுவதற்காக கூடியளவு நிதியத்தின் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். சுகாதார துறையில் தேவைகள் என இனங்காண்பதற்கு மற்றும் தேவைகளுக்காக பணத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களை கடைபிடித்து பெறுகைத் தேவைகள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அதற்கு முரணாக செயற்பட்டு பெறுகை செய்முறை ஒன்றினை கடைபிடிக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 9.20 மில்லியன் தொகை செலவிடப்பட்டு தேசிய கண் வங்கிக்காக Cornea Storage Media Sterile (Vial) 480 அலகுகள் கொள்வனவு செய்வதற்கு 2019 ஜனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதியுள் தனியார் ஆய்வுகூடம் ஒன்றிற்கு ரூபா 2.18 மில்லியன் தொகை செலுத்தி கண் தானம் செய்வோரின் குருதி மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக செயற்பட்டிருந்தது. 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக அந்த ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக ஆய்வுகூடம் ஒன்று தெரிவு செய்யும் நோக்கத்துடன் திறந்த விலைகூறல் அழைக்கப்பட்டிருந்த போதிலும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.5(ஆ), 5.3.1, 5.3.11, 5.3.13, 5.3.19, 6.3.3, 6.3.6, 7.9.11 மற்றும் 7.11.1 ஆகிய வழிகாட்டல்களை கடைபிடித்திருக்காததுடன் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்களுக்கு அந்த இரண்டு மாதங்களில் ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக ரூபா 862,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கண் வங்கிக்காக Cornea Storage Media Sterile (Vial) கொள்வனவு செய்வதற்காக மற்றும் குருதி மாதிரி பரிசோதனைக்காக வழங்குனர்கள் தெரிவு செய்வதற்காக தேசிய கண் வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் 2020 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மஹரகம எதிர்பார்ப்புக்கள் வைத்தியசாலையின் Pet CT Scanner இயந்திரத்திற்காக Independent Fractianation and Injection Unit for high energy Radiopharmaceuticals with authomated injection unit 01 தொகை கொள்வனவு செய்வதற்காக ரூபா 30.08 மில்லியன் நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை நிபந்தனைகளின் படி, ஒப்பந்த வேலை பெறுமதியில் 80 சதவீதம் இயந்திரத்தை வைத்தியசாலைக்கு ஒப்படைத்த பின்னரும் மீதியான 20 சதவீதம் குறிப்பிட்ட இடம்சார் பயிற்சி மற்றும் ஏற்கை சான்றிதழ் வழங்கிய பின்னர் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இடம்சார் பயிற்சி உற்பத்தி நிறுவனத்தின் விஷேடத்துவர் ஒருவரினால் வழங்கப்பட்டதெனவும் மற்றும் இயந்திரம் குறிப்பிட்ட விபரக் குறிப்புகளுக்கு அமைவாக வழங்கப்பட்டிருந்தது எனவும் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் ரூபா 30.08 மில்லியன் மொத்தப் பெறுமதியும் 2019 திசெம்பர் 24 திகதி செலுத்தப்பட்டிருந்தது. | இயந்திரம் விவரக் குறிப்புகளுக்கு அமைவாக ஒப்படைக்கப்பட்டது எனவும் உரிய முறையில் இடம்சார் பயிற்சி வழங்கப்பட்டது எனவும் பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்டிருந்தது என மற்றும் அதன் படி மொத்தப் பெறுமதியும் செலுத்தப்பட்டது என | ஒப்பந்த வேலை நிபந்தனைகளின் பிரகாரம் பெறுகை கருமங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்காக பெறுகை நிறுவனம் செயற்பட வேண்டும். மேலும் இடம்சார் பயிற்சி பெற்றுக் கொள்ளல் மற்றும் விவரக் குறிப்புகளின் படி இயந்திரம் வழங்கப்பட்டதென அறுதியாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரம் மொத்தத் தொகையையும் செலுத்துதல் பெறுகை நிறுவனத்தின் பொறுப்பு ஒன்றென கணித்து செயற்பட வேண்டியிருந்தது. |